Registered as a Newspaper

A/L 87 DAY CLASS
[Mon. -- Fri]
PHYSICS
ஆசிரியர்: திரு. R. சத்தியசீலன்
7-30 — 8-30
ஒலியியல்
ஆரம்பம்: 10-03-1987
8-30 -- 9 30
சடப்பொருளின் இயல்புகள்
ஆரம்பம்: 05-03-87
New Master
INSTITUTE
B.M C. Lane, JAFFNA.

உதயன்

விலை: ரூ. 1=25

A/L 87
DAY CLASS
(Mon. - Fri)
CHEMISTRY
ஆசிரியர் திரு மக்ஸி
8-30 — 9-30
சேதன இரசாயனம்
9-30 — 10-30
பொது இரசாயனம்
New Master
INSTITUTE
B M.C. Lane, JAFFNA.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

பதிப்பு 2 யாழ்ப்பாணம் அக்ஷய வரு மாசி மீ 18 உ திங்கட்கிழமை திதி 1407 றஜப் பிறை 1 (02-03-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY இதழ் 81

ராஜீவின் புதிய கடிதம்; அரசுக்கு நெருக்கடி நிலை

அரச அமைச்சர்கள் எதிர்க்கட்சித் தலைவர்களோடு ஜே. ஆர். இரகசிய ஆலோசனை

கொழும்பு, மார்ச் 2

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு கடந்த வார மத்தியில் புதிதாகக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அதன் பின்னர் அரசாங்க வட்டாரங்களில் ஒரு நெருக்கடி நிலை உருவாகி இருப்பதாக அறியவருகிறது.

அந்த நெருக்கடி நிலையை அடுத்து ஜனாதிபதி ஜெயவர்த்தன தமது அமைச்சர்களுடனும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடனும் இரகசிய ஆலோசனை நடத்தினார்.

ராஜீவின் கடிதத்திற்கான பதில் ஏற்கனவே புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் மூலம் அனுப்பிய போதிலும், சரியான விளக்கம் கொடுப்பதற்காக காணி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்காவை புதுடில்லி அனுப்ப ஜனாதிபதி முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

இனப்பிரச்சினை விடயத்தில் இலங்கை அரசாங்கம் [illegible] நிலை குறித்து [illegible] செயம் தெரிவிக்கும் வரைதில் கடந்த திங்கட்கிழமை (23 ஆம் திகதி) இந்திய லோக்சபையில் ஜனாதிபதி ஜெயவர்த்தன ஆற்றிய உரை அமைந்தது.

இதையடுத்தே சென்ற வார ஆரம்பத்தில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சில முக்கிய விடயங்கள் அடங்கிய புதிய கடிதம் ஒன்றை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்தமை தெரிய வருகிறது.

இந்தக் கடிதத்தைத் தொடர்ந்து அரசாங்கத்திற்கு நெருக்கடி தோன்றியிருப்பதாக நம்பகரமாக அறியவந்துள்ளது.

இந்தக் கடிதம் தொடர்பாகவும் இதற்கு முன்னர் ராஜீவ் காந்தி அனுப்பி வைத்த மற்றைய கடிதம் தொடர்பாகவும் தனது அமைச்சர்களுடன் ஜனாதிபதி ஜெயவர்த்தன ஆலோசனை நடத்தினார்.

முந்திய கடிதத்தில் ராஜீவ் காந்தி குறிப்பிட்டபடி நிபந்தனை ஏதுமின்றி வடக்கிற்கான பொருளாதாரத் தடையை நீக்கி, இராணுவத் தாக்குதல்களை நிறுத்தினால் என்ன என்று ஜனாதிபதி அமைச்சர்களிடம் கேட்டார்.

பல அமைச்சர்கள் வடக்குமக்களின் கஷ்டத்தைக் காரணம் காட்டி இந்த நடவடிக்கையை எடுப்பது வரவேற்கத்தக்கது எனத் தெரிவித்ததாக அறியவருகிறது.

எனினும் சில முக்கிய அமைச்சர்கள் சொரவப் பிரச்சினையை சாட்டாகக் காட்டி இதனை வரவேற்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய நெருக்கடி நிலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

மறியற் போர் தொடருமானால் பெரும் பாதிப்பு

பிரமுகர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்2

யாழ். செயலகம் கூட்டப்பட்ட அரச அதிகாரிகள் முன் அடகு வைத்தோர் சங்கம் நடத்தி வரும் மறியல் போராட்டம் தொடருமானால் யாழ்ப்பாணத்தில் பெருந் தாக்கம் ஏற்பட இடமுண்டாகும்.

–இவ்வாறு யாழ்ப்பாணத்தில் உள்ள பல வர்த்தகப் பிரதிநிதிகளும், அரச ஊழியர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்

ஏற்கனவே இப்போராட்டம் காரணமாக கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர், வங்கி ஊழியர்கள் உட்பட பல பொதுமக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

தொடர்ந்தும் ஏனைய வங்கிகள் முன் மறியல் போராட்டம் விரிவாகி கப்படுமானால் வடக்கில் பெரும் பாதிப்பு ஏற்படும் என கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

(உ-10)

கடைநேரம்

02-03-1987
திங்கட்கிழமை

கடைநேரம்:
12-28 முதல் 1-58 வரை
ராகுகாலம்:
7-58 முதல் 9-28 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

வடக்கில் வைத்து அடகு நகைகளை மீள அளிக்க அமைச்சர் அத்துலத் அனுமதி

மக்கள் வங்கித் தலைவரே பின் நிற்கிறார்

யாழ்ப்பாணம், மார்ச்2

யாழ்ப்பாணப் பகுதி மக்களின் அடகு நகைகளை இங்கு கொண்டு வந்து வழங்குவதற்குத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி இணக்கம் தெரிவித்துள்ளதாக அறியவருகிறது.

எனினும் மக்கள் வங்கியின் தலைவர் டாக்டர் எஸ். பொன்னம்பலம் இதற்குத் தடையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடகு நகைகள் விவகாரம் தொடர்பாக யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் நேற்றுக் கொழும்பில் உள்ள உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல, தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் ஆகியோருடன் அரச அதிபர் தொடர்பு கொண்டபோது அவர்கள் யாழ்ப்பாணத்தில் வைத்த நகைகளை மீள விக்க இணக்கம் தெரிவித்தனர்.

ஆனால் மக்கள் வங்கியின் தலைவரே அடகு நகைகள் வழங்கும் விவகாரத்தில் பின்னடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை நிதி அமைச்சருடனும் மக்கள் வங்கித் தலைவரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கட்டுவனில் நேற்றும் ஷெல் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

கட்டுவன் பகுதியில் நேற்றும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

சனிக்கிழமை இப் பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலின் போது விடுதலைப் புலிகளினால் சேதப்படுத்தப்பட்ட கவசவாகனத்தை மீட்கும் பணியில் நேற்று இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

அவ்வேளையிலேயே துப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி மூளி

பாத்தியே, பாத்தியே! அரசியல் என்டாலே இதுதான் ராஜீவ் – கருணாநிதி உறவு வரப்போகுதாமே...! அரசியலில் நடக்கமுடியாதது என்டு சொல்லி எதையும் ஒதுக்க ஏலாது கண்டியளோ!

அத்தியாவசியப் பொருள்களை நியாய விலைகளுக்கு விற்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்2

தமிழ் மக்கள் இக்கட்டான சூழ்நிலையை எதிர்நோக்கும் இவ்வேளையில் கையிருப்பில் உள்ள அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை நியாயமற்ற முறையில் அதிகரிக்க வேண்டாம். நியாய விலைகளில் விற்பனை செய்யுங்கள்.

இவ்வாறு யாழ் வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி விஜயம்

ஜனாதிபதி ஜெயவர்த்தன இன்று திங்கள் மாலை, மாலைதீவுக்கு 3 நாள் பயணம் ஒன்றை மேற்கொள்வார்.

எதிர்வரும் வியாழன் அவர் கொழும்பு திரும்புவார். (உ-எ)

கொட்டடிப் பகுதியில் கொள்ளைச் சம்பவங்கள்

கதவு, ஜன்னல் நிலைகள்கூட அபேஸ்

யாழ்ப்பாணம், மார்ச்2

யாழ் கொட்டடிப் பகுதியிலும் தொடர்ந்து தொடர்பு நிலையத்தை அண்டியுள்ள பகுதிகளிலும் இருந்து இராணுவ நடமாட்டம் காரணமாகவும், ஷெல் தாக்குதல் காரணமாகவும் இடம் பெயர்ந்துள்ள மக்களின் வீடுகளில் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெறுவதாகத் தெரியவந்திருக்கிறது.

இந்தப் பகுதிகளில் உள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் கதவு நிலைகள், ஜன்னல்கள் என்பனவும் இனம் தெரியாதோரால் களவாடப்படுகின்றன.

ஒரு சில வீடுகளில் கூரை மதில்கள் கூட உடைக்கப்பட்டு அதன் கற்கள் கூட ஏற்றப்பட்டுச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது (உ-10)

இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச்2

சனிக்கிழமையன்று வளைப்பகுதியில் ஹெலிக்கொப்டரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த இளைஞர் நேற்று மரணமானார்.

இராஜரட்ணம் சிறிஸ்வசபேசன் (29 வயது) என்ற இவ்வாலிபனே மரணமானவர் (உ-10)

பரிதாப சம்பவம்

தகப்பனும் மகளும் குளத்தில் மூழ்கி மரணம்

இருபாலையில் நேற்றுமாலை சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

குளத்துக்கு குளிக்கச் சென்ற தகப்பனும் மகளும் நீரினுள் மூழ்கி மரணமானார்கள்

நேற்று மாலை நான்கு மணியளவில் இருபாலை கிழக்கு விதானையார் வீதியில் உள்ள குளத்தில் இச் சம்பவம் நடைபெற்றது.

ச. சிவசுப்பிரமணியம் (47 வயது) என்பவரும் அவரது மகள் சிவசுப்பிரமணியம் நளினி (8 வயது) என்ற சிறுமியுமே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இவர் குளத்துக்குக் குளிக்கச் செல்வது வழக்கம் என்றும் நேற்றும் இதேபோல் குளிக்கச் சென்ற மகளை தோளில் சுமந்தவாறு குளத்தின் ஆழமான பகுதிக்கு சென்ற போது அவர் நீரில் மூழ்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

வவுனியாவில் மும்முரத் தேடுதல்

யாழ்ப்பாணம், மார்ச்2

வவுனியா சேமமடு, நாவற்குளம் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவும் சனிக்கிழமையன்றும் படையினர் கடும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தேடுதல் நடவடிக்கையின் போது பலர் கைது செய்யப்பட்டு சாரணைக்காக வவுனியா முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஏப்ரலில் சட்டசபைத் தேர்தல் நடக்கலாம்!

தி. மு. க - இந்திரா காங்கிரஸ் கூட்டணி தமிழகத்தில் உருவாகும்

முதல்வர் பரூக் அப்துல்லா தூது

கருணாநிதி

ராஜீவ்

சென்னை, மார்ச் 1

தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ்- தி.மு.க கூட்டணி அமைக்கும் பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

ஜம்மு- காஷ்மீர் முதலமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லாவின் மூலம் இம் முயற்சி நடைபெறுவதாக சென்னைத் தகவல்கள் தெரிவிக்கின்றன

விரைவில் பிரதமர் ராஜீவ் காந்தி- தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி சந்திப்பு இடம் பெறுமாயின் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று சென்னைத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

கூட்டரசு முயற்சி தோல்வி

அ.தி.மு.க.வுடன் கூட்டரசு ஒன்றை அமைக்க இந்திரா காங்கிரஸ் தலைமைப் பீடம் முயற்சித்தது.

ஆனால் தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி. இராமச்சந்திரன் அதை விரும்பவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதைத் தொடர்ந்தே இப்புதிய முயற்சி என்று தெரிய வருகிறது.

ஏப்ரலில் தேர்தல்?

இதனிடையே, தமிழ்நாடு சட்டசபை அ.தி.மு.க குழுவில் உள்ள எம்.எல்.ஏக்கள் பலர் தமக்கு எதிரான அணியில் உள்ளனர் என்ற எண்ணத்திற் சட்ட சபைத் தேர்தலை ஏப்ரல் மாதத்தில் நடத்த முதலமைச்சர் இராமச்சந்திரன் திட்டமிட்டுள்ளார்.

சட்டசபைக் கூட்டத் தொடரை ஆரம்பித்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

தூர இடங்களுக்கான மூன்று பஸ் சேவைகள் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச்2

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு, அனுராதபுரம், திருகோணமலை ஆகிய இடங்களுக்கான மூன்று பஸ் சேவைகள் நேற்று யாழ் பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டன.

வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் முதல் ரிக்கற்றை விற்பனை செய்து இச் சேவைகளை ஆரம்பித்து வைத்தார்.

வ. பி. போ. ச வின் செயல் பகுதி முகாமையாளர் திரு கே. மயில்வாகனம், சாலை அதிபர் திரு. வி. எஸ். சொக்கலிங்கம் ஆகியோரும் இந்நிழ்ச்சியில் பங்கு பற்றினர்.

யாழ் – கொழும்பு பஸ் சேவை பல வருடங்களுக்கு முன்னதாகவே நிறுத்தப்பட்டிருந்தது

(4 ஆம் பக்கம் பார்க்க)

பொருளாதார தடையை நீக்க தமிழக அறிஞர்கள் கோரிக்கை

சென்னை, மார்ச் 2

இலங்கைத் தமிழர் மீதான இராணுவத் தாக்குதலை நிறுத்தி, யாழ்குடாநாடு மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடையை அகற்ற வேண்டும்.

தமிழ்நாட்டு அறிஞர்கள் இலங்கை அரசுக்கு மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தனர்

இந்த அறிஞர்கள் கூட்டாக விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது

அறிக்கை வருமாறு:

டிசம்பர் 19 இற்குப் பின்னர் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட நிறுத்தம், யாழ்குடாநாடு மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடையை அகற்ற வேண்டும். தமிழர் மீதான இராணுவத் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாணம் மீதான

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

தேவை

தையல்வேலையில் அனுபவம் வாய்ந்த பெண் பிள்ளைகள் தேவை. கீழ் உள்ள விலாசத்திற்கு அனுபவ விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். அஜந்தாஸ், 54, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

7-ம் ஆண்டு மாணவருக்கான புதிய பாடத் திட்டத்துக்கு அமைவான விளக்கமான சமூகக்கல்வி பாடநூல் முழு அலகுடன் வெளிவந்து விட்டது. ஆக்கம்: சி. நடராசா, (ஆலோசகர் சமூகக்கல்வி) வெளியீடு விற்பனை: மக்மிலன் புத்தகசாலை, No 3 ஆஸ் பத்திரி வீதி, பண்ணியம் யாழ்ப்பாணம்.

வெங்காயச் செய்கையில் இம்முறை அமோக விளைச்சல்

பலாலி, மார்ச். 2

யாழ் குடாநாட்டில் மார்ச்சு/ஏப்ரலில் வெங்காயச் செய்கையில் என்றுமிலாதவாறு அமோக விளைச்சல் கிடைத்திருக்கிறது.

வெளிநாட்டு விதை உருளைக்கிழங்கு யாழ் விவசாயிகளுக்குக்கிடைக்காமையினாலும், உள்ளூர் (நுவரெலியா)விதை கிழங்கினை நாட்டுவதில் குடாநாட்டு விவசாயிகள் நாட்டம் கொள்ளாததாலும் இதுவரை காலமும் உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்பட்ட தோட்டங்களில் இப்போகம் வெங்காயச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

வெங்காய உற்பத்தி இம்முறை அதிகரித்த தற்கு இது ஒருகாரணமாகும்

காலநிலையும், கவாத்தியமும் வெங்காயச்செய்கைக்கு இம்முறை விளைச்சல் முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்திருக்கிறது

வருடாவருடம் காலம் மாறிப்பெய்யும் மழையினாலும் பனியின் தாக்கத்தினாலும் செம்மண் நிலப் பகுதிகளிலும், கடற்குழலின் தாக்கத்திற்கு அப்பாற்பட்ட பகுதிகளிலும் வெங்காயச் செய்கையின் மாரிப்போக அறுவடை பாதிப்படைந்து வந்தன

இவ்வருடம் (1986பிற பகுதியில்) மழையினதும் பனியினதும் வாயின்தாக்கம் பிந்தியதால் இயல்பாகவே அது வெங்காய பயிர்ச் செய்கைக்கு உகந்த சுவாத்திய நிலையைப் பெற்றுக் கொடுத்தது.

மார்ச்சிப்போக வெங்காயத்திற்கு புழுவினால் ஏற்படும் பாதிப்பு மிகக் குறைவானதால் புழு மருந்துகள் செலவும் மிகவும் குறைவாகவே இருந்தது.

அடிக்கடி மழை பெய்யாமையாக பகைத்தாக்கமும் ஏற்படவில்லை

அறுவடை காலத்தில் வெங்காயத்திற்கு ஏற்பட்ட எரிவுநோய்கூட பாரதூரமான தாக்கத்தைஏற்படுத்தவில்லை. அந்நோயும் கட்டுப்படுத்தக்கூடியதாகவிருந்தது

தற்போது வெங்காயத்திற்கான விலையும் அதிகரித்துச் செல்லும் போக்குக் காணப்படுகின்றமையாலும், கொழும்புக்கும் பிறஇடங்களுக்கும் வெங்காயத்தினை அனுப்பும் முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணத்தினால் கூடியவிலைக்கு மண்ணெண்ணெய் பெற்றுஉற்பத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டாலும் அதிக விலைச்சல் அச்செலவைத் தாக்குப் பிடிக்குமென விவசாயிகள் கருத்துத் தெரிவித்தனர். (உ-119)

மானவரின் கல்விமுறை பெரும்சிக்கலான நிலையில்

துணைவேந்தர் வித்தி கவலை

மாவிப்பாய், மார்ச் 2

இன்றைய கல்வித் துறை பெரும் குழப்பமான நிலையில் இருக்கிறது. திட்டமிடப்படாத கல்வி முறையால் மாணவர்களின் கல்வி உலகம் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. க. வித்தியானந்தன் இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் கூறினார்.

மகாவித்தியாலய அதிபர் திரு எஸ் எம். மூர்த்தி தலைமையில் நடைபெற்ற விழாவில் துணைவேந்தர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

விழாவில் திரு செ. கதிர்காமநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு வித்தியானந்தன் மேலும் கூறியதாவது:-

இன்றைய கல்வி உலகம் பெரும் குழப்பமான நிலையில் உள்ளது.

தேவை சூழ்நிலைக்கேற்ப அமையாத கல்வித்திட்டம்; கல்லூரித் திட்டங்களுக் கமையாத ஆசிரியர் நியமனம், இடமாற்றம், தகுதியின்றி மாணவர் வகுப்பேற்றம், நிணிக்கப்படும் பாடபுத்தகங்கள், மாணவர் ஒழுங்கீனங்கள், இன்றைய அரசியல் – ஆகியவை கல்வி நிலைக்கு ஒவாத தலையிடியைக் கொடுத்து வருகின்றன.

இன்றைய சூழ்நிலையில் பலகல்லூரிகள் மூடப்பட்டுள்ளன, பல கல்லூரிகள் இருந்த இடம் தெரியாமல் மாற்றப்பட்டுள்ளன.

மாணவர் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்ல

முடியாத நிலை எனினும் தேர்வுப் பெறுபேறுகளைப் பார்க்கும்போது தமிழர், கல்வியில் இன்னும் கவனம் செலுத்தி தம் சொத்தைப் பாதுகாப்பதைக் காணக்கூடிய நாயுள்ளது.

தமிழ்ப் பகுதிகளில் முதற்நிலைப்பள்ளிக்கூடங்களில் மக்கள் சேரும் விகாதாசாரம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து செல்கிறது.

ஓராண்டு வீழ்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது 82 6 வீதத்திலிருந்து 80 வீதமாக அது வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆனால் சிங்கள மக்கள் முதல்நிலைப் பள்ளிகளில் சேரும் வீதம் 86 9வீதத்திலிருந்து 95.7 வீதமாக அதிகரித்துள்ளது.

ஆகவே இக்கிராமப் புறக்கல்விக்கு, பள்ளிக் கூடங்களை வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பு எமக்குண்டு.

இக்கட்டான காலகட்டங்களிலே கற்கமுடியாது மனதை ஒருமுகப்படுத்தி படிக்க முடியாது என்ற மனோபாவத்தை உடனடியாக மாற்றி அமைக்கவேண்டும்.

அணுக்குண்டு வீச்சினை அனுபவித்த ஜப்பான் நாடு இக்கட்டான காலகட்டங்களிலும் தன் கல்வியைத் தளரவிடாது முன்னெடுத்துச் சென்றமையால்தான் இன்று அறிவியலிலும், கலைகளிலும் தொழில்நுட்பவியலிலும் வியத்தகு சாதனைகளைச் செய்யும் நாடாக முன்னேறியுள்ளது.

எமது பாடசாலை கற்பித்தல் முறையினை மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது. பெருமளவிலே குறிப்பு வழங்கும் முறை பின்பற்றப் படுகிறது குறிப்புக்களை மனனம் செய்வதும், ஒப்புவிப்பதும் மட்டுமே இன்றைய கல்வி நிலை இதனால் முழுமையாக மாணவரின் ஆளுமையை வளர்க்க முடியாதுள்ளது

ஒன்றிணைந்த பல்வேறு அனுபவங்கள் வாயிலாக கற்றல் - கற்பித்தல் நிகழ்த்தப்பட வேண்டும்.

பாடசாலை நூல் நிலையங்களை ஒழுங்கமைத்து நூல் நிலைய அனுபவங்களை மாணவருக்கு வழங்க வேண்டும். இப்படி அவர் கூறினார்.

மாவிப்பாய் வலயக் கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்செயன் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பண்டிதர் நா. இராசையா கூட்டப் பலர் உரையாற்றினர். (உ-90)

ஆசிரியர்கள் வரவு ஒழுங்கில்லை

மண்டைதீவு, மார்ச் 2

மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் கடமை யாற்றி வரும் வெளியூர் ஆசிரியர்கள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் சமுகம் தராத காரணத்தால் மாணவர்களின் கல்வித் தரம் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது

இது குறித்து பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் மிகவும் கவலை தெரிவித்துள்ளார்கள்.

வெளியூர் ஆசிரியர்களுக்கென விசேட பட்டு சேவை காலை 8 மணிக்கு குருநகர் இறங்குதுறையிலிருந்து புறப்படுவதற்கு ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டிருந்திறது.

தற்பொழுது ஏற்பட்டுள்ள மிகச் சிறப்பான காரணமாகப் போக்குவரத்துக் கட்டணமாக ஆளுக்கு 30ரூபா அறவிடப்படுகிறது.

இதன் காரணமாகவே ஆசிரியர்கள் வரவு குறைந்து காணப்படுவதாகக் கூறப்படுகிறது. (உ-83)

பாலர் பாடசாலைக்கு முயற்சி

மாவிப்பாய், மார்ச் 2

பின்தங்கிய மக்களின் நலன் காக்கும் பணியில் கல்வி சம்பந்தமான தேவையைக் கருத்தில் கொண்டு பாலர் பாடசாலை ஒன்றினை ஆனைக்கோட்டை முள்ளிக் கிராமத்தில் அமைப்பதற்கான முயற்சியில் மாவிப்பாய் சுதந்திரப் பறவைகள் அணியினர் ஈடுபட்டுள்ளனர் அண்மையில் இவ்வணியினர் இப்பகுதி பின்தங்கிய மக்களுக்கான இலவச உடைகளையும் வழங்கியிருந்தனர்.

விளையாட்டரங்கு

சென்றலைட்ஸின் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் வருடாந்த மென்பந்து கிரிக்கெட் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

6 ஆவது ஆண்டாக நடைபெறும் இந்த கிரிக்கெட் போட்டியில் யாழ் மாவட்டத்தில் உள்ள பல சிறந்த விளையாட்டுக் கழக அணிகள் பங்கு பற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏப்ரல், மே மாதங்களில் ஒவ்வொரு சனி, ஞாயிறு, வார்த்தை விடுமுறை தினங்களில் நடைபெறும் இப்போட்டிக்கான விண்ணப்ப முடிவு நாள் இம்மாதம் 28 ஆம் திகதியாகும்.

விண்ணப்பப் படிவங்களுக்கும் மேலதிக விவரங்களுக்கும் காரியதரிசி சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 33 முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும். (உ-7)

இல்ல விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 2

தைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தில் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி (திங்கள்)பிற்பகல் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சமாதான நீதிவான் திரு அ. சின்னையா கலந்து கொள்வார்.

அதிபர். திரு. சோ. கணேசலிங்கம் தலைமை வகிப்பார். (உ-எ)

மக்கள் முகம்

காரைநகர் கலைவாணி சனசமூக நிலையம்

காரைநகர், மார்ச் 2

காரைநகர் கலைவாணி சனசமூக நிலையத்தின் 1987 ஆம் ஆண்டு நடப்பு வருட நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர்: க. தேவராசா உபதலைவர்: க. பரமசாமி செயலாளர்: க. மகேந்திரராஜா உப செயலாளர்: க. சண்முகநாதன் பொருளாளர் மா. ஜோசப் வரன் உபபொருளாளர்: எம். கே. கந்தசாமி போஷகர்கள்: செ. இலட்சுமணன், திருமதி சோ. குணசேகரன்.

கணக்காய்வாளர்: செல்வி மா. சோகிலா

ஆறுபேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள் (இ)

இப்படியும் திருட்டு

யாழ்ப்பாணம்.மார்ச்2

நேரவாளியை ஏற்றி வந்த காரொன்றில் இருந்த 'பெற்றோல் கான்' நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் வைத்து இனந்தெரியாதோரால் எடுத்துச் செல்லப்பட்டது.

நேற்றுக் கடற்கரை வீதியில் இராணுவத்தினரின் குட்டுக்கு இலக்கான இளைஞர் ஒருவரை யாழ் ஆஸ்பத்திரிக்கு ஏற்றிவந்த காரில் இருந்தே மேற்படி கான் அகரிக்கப்பட்டது. (உ-10)

சமுத்திரத்திற்கு பாதுகாப்பு

சேனநாயக்கா சமுத்திரத்திற்கு 24 மணி நேரமும் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்திலுள்ள சிங்களக் கிராமங்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு வருவோர் சமுத்திரத்தையும் சேதப்படுத்தலாம் எனக் கருதியே இப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (உ-21)

மின்சார சபையின் வடபிரதேச பணிமனை வவுனியாவுக்கு மாறும்?

யாழ்ப்பாணம் . மார்ச் 2

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் இலங்கை மின்சார சபையின் வடபிரதேச காரியாலயத்தை வவுனியாவுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மின்சார சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் மூலம் வடபகுதிக்கான சகல மின்சார விநியோக, திருத்த வேலைகளை நிறுத்திவிட அரசு தீர்மானிக்கிறது

தற்போது வடபிரதேசத்திற்கான தலைமை அலுவலகம் அநுராதபுரத்தில் உள்ளது

இதன் கீழ் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணப் பகுதிகளுக்குரிய மாவட்டக் காரியாலயங்கள் இயங்குகின்றன.

எனினும் இவை அனைத்துக்கும் பொறுப்பாக —தமிழ் பகுதியில் உள்ள காரியாலயம்—யாழ்ப்பாணத்திலேயே நிறைவேற்றுப் பொறியியலாளர் ஒருவரின் கீழ் இயங்குகிறது.

இக் காரியாலயத்தில் சுமார 150 தமிழ் ஊழியர்கள் கடமை புரிகின்றனர்.

இக் காரியாலயத்தை வவுனியாவுக்கு மாற்றுவதன் மூலம் குடாநாட்டுக்குள் நடைபெறும் மின்சார விநியோகத்தைப் படிப்படியாகக் குலைத்துவிடலாம் என அரசு நினைக்கிறது.

—இவ்வாறு அவ்வதிகாரி தெரிவித்தார். (உ-5)

முதூரில் சுட்டுக் கொல்லப்பட்ட 9 பேர் பற்றிய விவரம்

முதூர், மார்ச் 2

கடந்தமாதம் முதூர்த் தொகுதியில் ஆயுத படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மக்களின் பெயர்களை முதூர் பிரஜைகள் குழு வெளியிட்டுள்ளது.

ஒன்பது பேர் உயிரிழந்தனர். அவர்களில் இரண்டு பேர் 16 வயது இளைஞர்கள்.

கடந்த மாதம் 5 ஆம் திகதி 5 பேரும் 18 ஆம் திகதி ஒருவரும் 25 ஆம் திகதி இரண்டு பேரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பெயர்கள் வருமாறு;

1. பொன்டிற் செல்வச், வயது 19, பாலத்தடிச்சேனை
2. கோணமலை நட் சணமூர்த்தி வயது 29, பட்டித்திடல்.
3. முத்தான்குட்டி சங்கரப்பிள்ளை, 36 வயது, பட்டித்திடல்.
4. சரவணமுத்து சச்சிதானந்தன், 26 வயது, முள்ளம்போடிவெட்டை
5. தோமஸ் செபஸ்தியன், 46 வயது, பாலத்தோப்பூர்.
6. கதிராமத்தம்பி சண்முகபிள்ளை, 65 வயது, பள்ளிக்குடியிருப்பு.
7. செல்லத்தம்பி சச்சிதானந்தம், 16 வயது, வாரதிபுரம்.
8. இராசதுரை கோணேஸ்வரன், 23 வயது, கட்டைப்பறிச்சான்.
9. தி. சச்சிதானந்தன் 16 வயது, பாரதிபுரம் (இ-எ)

திருமலையில் கைது செய்யப்பட்ட பின் காணாமற்போன எண்மர்

திருகோணமலை,மார்ச் 2

மூதூர்ப் பகுதியில் கடந்த டிசம்பரில் ஆயுதபடையினரால் கைது செய்யப்பட்ட பின் காணாமற் போனவர்கள் என்று அறிவிக்கப்பட்ட எட்டுத் தமிழர்களின் பெயர்களையும் திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை பாதுகாப்புப் படையினருக்கு அறிவித்து உள்ளது

அந்த எண்மரின் பெயர்கள் வருமாறு;

1 சிவசேகரம், கிருஷ்ணராசா, - கட்டைப்பறிச்சான். விவசாயி, வயது 23.
2 ராஜரத்தினம் குணரத்தினம் – சேனையூர், காவலாளி, வயது 27.
3. தேவ பொன்கலன் பாய்வா, மூதூர், காய்நடை வியாபாரி வயது, 33
4 எஸ். சச்சிதானந்தன், முள்ளம்போடி வெட்டை, தொழிலாளி, வயது 26
5 பிதாம்பரம் பாலத்தோப்பூர், சலவைத் தொழிலாளி.
6. தோமஸ் செபஸ்தியன், தோப்பூர்,சலவைத் தொழிலாளி, வயது 46.
7 முத்தான்குட்டி சங்கரப்பிள்ளை தோப்பூர், தொழிலாளி, வயது 37.
8. கோணமலை நட் சணமூர்த்தி, பட்டித்திடல், தொழிலாளி, வயது 29.

டிசம்பர் 12 – 26 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் (இ – எ)

நாளை கூட்டுறவுச் சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ் அரசாங்க செயலகம் இயங்காத காரணத்தால் அரிசி மா, சீனி பெறுவதற்குரிய கட்டளை பெறமுடியாமல் இருக்கிறது. இதனால் அடுத்த மாதம் உணவு முத்திரை, மீனவர் கட்டை முதலியவற்றிற்கு உணவுப் பொருள்கள் கொடுக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. இந்த நிலைமை பற்றி ஆலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கான கூட்டம் நாளை 3ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள கூட்டுறவு [illegible] அலுவலகத்தில் நடைபெறும். (ஒ)

நீக்கார் பட்டியல்

திருமதி அனு அரியநாயகம்

'அர்த்தருடைய பரிசுத்தவாள்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது',

உடுப்பிட்டி இயேசு நிலையத்தைச் சேர்ந்த திருமதி ஆலிஸ் அனு அரியநாயகம் இறைஸ்து இயேசுவுக்குள் இளைப்பாறியுள்ளார். இவர் பாஸ்டர் ஜோர்ஜ் அரியராஜா அரியநாயகத்தின் அன்பு மனைவியும், மார்க்ரஞ்சன், மின்னலா மரேக்கா ஜோனத்தான்விஜயன், ஜோய்ராணி, ரிமத்திமோசே பேர்ச்ராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். இறுதிச் சடங்குகள் உடுப்பி[illegible] (3-3-87) செவ்வாய்க்கிழ[illegible] 10மணி மனையில் நடைபெறும்.

ஷப்ரு நிதி நிறுவனம்

நடத்திய அறிவுப்புதிர்ப் போட்டி முடிவுகள்

மேற்படி போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அவர்களில் பெரும் எண்ணிக்கையினர் சரியான விடைகளை அனுப்பியிருந்தனர் அவர்களில் அதிஷ்டசாலிகளாக ஐம்பது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதல் 25 பேர்களின் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளிவந்தது மிகுதி 25 பேர்களின் விவரம் வருமாறு:

இல.	பெயர்	விலாசம்
26.	திரு. எஸ். யோகநாதன்.	பிரம்படி, கொக்குவில்.
27.	செல்வி. ரேணுகா இலங்கை நாயகம்	465/5, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
28	திரு. மு. உதயகுமார்,	மே/ பா. இ தெய்வானை, இல: 1, 1ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
29.	செல்வி. செ. ரேணுகா.	19, ஐயனார் கோயில் வீதி, வண்ணார் பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.
30.	திரு. கே. சற்குணராஜா.	கொக்குவில் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
31.	செல்வன். சண்முகநாதன் திருபுவனந்தன்.	465/ 1, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
32.	திரு. சபாபதி சத்திய நாதன்.	சந்தை வீதி, சுன்னாகம்.
33.	திரு. துரைசிங்கம் அருள் நிதி.	''குளகிரி'' குளாவை, சுன்னாகம்.
34.	திரு. சபா. ஜெயந்நாதன்.	''புஷ்பகிரி'' சுன்னாகம்.
35,	செல்வி. க. சிவனந்துரை.	அருளம்பலம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
36,	திரு.தம்பித்துரை நவரட்ணவேல்.	மாநகரசபை, யாழ்ப்பாணம்
37.	திரு. என் யோசேந்திரன் நிமலன்.	28,சிவப்பிரகாசம் வீதி,யாழ்ப்பாணம்.
38.	கஜாத்தா புவனபூஷணம்.	99 சிவப்பிரகாசம் வீதி,யாழ்ப்பாணம்.
39.	பிரேமளா துரைசாமி	200, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
40.	திரு. ஐயாத்துரை சச்சிதானந்தம்.	12,விதானையார் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
41.	திரு.இராமசாமிகமிந்தரன்.	பே/பா. எஸ். இராமசாமி, கொல்லங்கலட்டி,
42.	க. பத்மநந்தினி.	மகாஜனக் கல்லூரி மேற்கு ஒழுங்கை, தெல்லிப்பழை.
43.	திரு. ஆர். பிரபாகரன்.	மே/பா. க. இரத்தினசபாபதி, வைரன் கண்டிவீதி, கோப்பாய் தெற்கு கோப்பாய்.
44.	செல்வன். வி எம். செந்தில் வேல்.	'வேல் வாசம்', சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.
45.	திரு. யோ. இரவீந்திரன்.	'சக்தி வாசா', சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
46.	திரு. சிவக்கொழுந்து வேலுப்பிள்ளை.	மலேரியாத்தடைப்பகுதி உத்தியோகத்தர், மீசாலை வடக்கு, கொடிகாமம்.
47.	திரு. இ. பேரின்பநேசன்	புத்தூர் கிழக்கு, புத்தூர்.
48.	செல்வி. கி. மலர்விழி.	மே/பா. திரு. க. இராஜவிநாசம், மயிலங்கூடல், இளவாலை
49.	திருமதி. ஞா. விவேகானந்தன்.	நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.
50.	திருமதி.ஈஸ்வரி பெருமாள்.	சமநாடு விமிடெட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

இல.15,1ஆவதுஒழுங்கை தொலைபேசி:24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 02-03-1987 த.பெ.இல. 88

உதய சங்கற்பம்

பாரம்பரியத்தைக் கொண்டு நியாயத்தை உரைத்துப் பார்க்கக்கூடாது நியாயத்தைக் கொண்டு பாரம்பரியத்தைப் பார்க்க வேண்டும்.

— அறிஞர் ரோல்ஸ்ரோய்.

மறியற் போராட்டமும் உள்ளூர் அதிகாரிகளும்

மத்திய வங்கியில் நகை அடகு வைத்தவர்களின் மறியற் போராட்டம் தொடர்கிறது. வங்கிக் கிளைகளில் அடகு வைத்த நகைகளை இராணுவ முகாம்கள் எதிலுமல்லாத் சம்பந்தப்பட்ட கிளைகளில் வைத்திட வழங்க வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கை.

அவர்களது கோரிக்கையும், போராட்டமும் நியாயமானவை மக்கள் வங்கியை நம்பி அதில் தமது பெறுமதி மிக்க நகைகளை அடகு வைத்தவர்கள், அவற்றை மீளப் பெறுவதற்குத் தேவையான பணத்தைச் செலுத்தியும் நகைகளை வருடக் கணக்காகப் பெற முடியவில்லை.

பாதுகாப்புக் காரணங்களைச் சாட்டாக வைத்து, வங்கி மக்களை நம்பிக்கை மோசடி செய்ய முயல்கிறது. தனக்கு உள்ள கடமையில் இருந்தும் தவறி வருகிறது அடகு வைத்தவர்களை இராணுவ முகாம்களுக்கும், கொழும்புக்கும் வருமாறு ஒவ்வாத நிபந்தனைகளை விதித்து வருகிறது

இராணுவ முகாம் ஒன்றுக்குச் சென்று அடகு நகைகளை மீளப்பெற முனைந்தவர்களுக்கு உண்டான அவதி யாவரும் அறிந்ததே அதன் பின்னரும் இராணுவமுகாம் சென்று நகைகளைப் பெறுவது என்பதை எவரும் நினைத்தும்பார்க்கமாட்டார்கள் அதுமட்டுமல்ல, ஒவ்வொருவரும் கொழும்புக்குச் சென்று நகைகளைப் பெறுவது என்பது இப்போது உள்ள இராணுவக் கெடுபிடியில் அடகு வைத்தோரை அவதியிலும் சிரமத்திலும் சிக்கச் செய்வதாகும்.

தமது கோரிக்கைகளை வென்று, நகைகளைப் பெறுவதற்காகப் பாதிக்கப்பட்டவர்கள் நடத்தும் மறியற் போராட்டம், இப்பகுதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வந்தது.

மக்கள் வங்கிக் கிளைகள் இயங்க முடியவில்லை. அதனால் வங்கி வாடிக்கையாளர்கள் பலவிதத்திலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஊழியர்களோ வெளியிடங்களுக்கு இடமாற்றம் இல்லையேல் பதவி இழப்பு என்ற நெருக்கடியை எதிர்நோக்குகிறார்கள். எல்லாவற்றுக்கும்மேலாகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரும் அவற்றின் விளைவாக பாகனேயாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

கடந்த ஒருவார காலமாக அடகு வைத்தோர் சங்கத்தின் மறியற் போராட்டம் அரசாங்கச் செயலகம் மற்றும் அரச அலுவலகங்கள் முன்பும் நடைபெற்று வருகிறது.

அதனால் பலமுகப் பாதிப்புகள் உண்டாகி உள்ளன. அரசாங்க நிர்வாகம் முற்றுகைக்கம்பித்துள்ளது ஒருபுறம். அதன் விளைவாக வருமானக்கோட்டுக்குக் கீழே உள்ள ஆயிரக் கணக்கான மக்கள் நேரடியாகவும் உடனடியாகவும் பாதிக்கப்பட்டுள்ளது மறுபுறம்.

அரசின் பொருளாதார முற்றுகையால் ஏற்கனவே நொந்து போயுள்ள விவசாயிகளும் தொழிலாளிகளும், மீனவர்களும் பட்டினியை எதிர்நோக்கும் போராபத்து உருவாகி உள்ளது. அரச செயலகம் இயங்காமையால் அவர்களைப் பட்டினித் தள்ளும் சூழப் போகிறது என்பதை யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் அரச அதிபருக்கு அனுப்பி வைத்திருக்கும் கடிதம் நன்கு புலப்படுத்துகிறது. நகரப் பகுதியில் நிலவை அதனாலும் கிராமப்புறங்களில் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை நிச்சயம் அதிகமாகவே இருக்கும்.

மொத்தத்தில் மக்கள் வங்கியில் நகைகளை அடகு வைத்துப் பாதிக்கப்பட்டவர்கள் பத்துப் பேர் என்றால் மறியற் போராட்டத்தால் வேறு நூறு பேர் பாதிக்கப்படும் நிலைமை உருவாகி உள்ளது. அதாவது மறியற் போராட்டத்தின் பரிமாணமும், தாக்கமும் விரிவடைந்துள்ளன.

இவ்விடயத்தில் அக்கறை காட்ட வேண்டிய முழுப் பொறுப்பும் இங்குள்ள அரச அதிகாரிகளையே சாரும்.

கொழும்பில் உள்ள நகைகளை இங்கு கொண்டு வந்தால் அவற்றைப் பொறுப்பேற்று விநியோகிப்பதற்குத் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்று வங்கி அதிகாரிகள் கருதக்கூடும்.

அடகு வைத்தோர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேசி, அவர்கள் மூலம் குடாநாட்டுக்குள் நகைகளைப் பாதுகாப்பாக விநியோகிக்கப் போராளிகளின் உதவியை நாடலாம்.

கொழும்புக்கு எடுத்துச் சென்ற நகைகளை, இங்கு கொண்டு வந்து சேர்ப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சின் உதவியை நாடலாம். பிரஸ்தாப அமைச்சு அதிகாரிகள் அதற்கு ஆதரவாக உள்ளதாக அறியப்படுகிறது.

அந்தச் சூழ்நிலையைச் சாதகமாகப் பாவித்து, சாதுரியமாகச் செயலாற்றி அடகு நகைகளை விநியோகிக்க இங்குள்ள மக்கள் வங்கி உயர் அதிகாரிகள் முயற்சி செய்ய வேண்டும் அரச அதிபரும் அவரது அதிகாரிகளும் பக்கத்துணையாக இருக்கலாம்.

இது அவர்களது கடமையாயினும், அதற்கு மேலாக ஒரு மக்கள் தொண்டாகக் கருதிச் சேவை செய்ய முன்வர வேண்டும். தமது சொந்த மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் இவ்வேளையில் அதனைத் தவிர்க்க உள்ளூர் அரச அதிகாரிகள் தம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும்.

பாக் எல்லையில் ஆப்கான் குண்டுவீச்சு

இஸ்லாமாபாத், மார்ச் 1

ஆப்கானிஸ்தான் போர் விமானங்கள் இரண்டாவது நாளாக நேற்று பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் குண்டுத் தாக்குதலை நடத்தின

இதனால் ஆப்கான் அதிகள் உள்ள இருமுகாம்கள் பாகிஸ்தான் எல்லையில் பலத்த சேதமடைந்தன. 64 பேர் பலியானார்கள். 238 பேர் படுகாயமடைந்தனர்.

ஐ. நா சபை ஆதரவில் நடத்த புதன்கிழமை ஜெனீவாவில் ஆப்கான்-பாகிஸ்தான் சமாதானப் பேச்சு வார்த்தைகளின் பின்னர் நடைபெற்ற இரண்டாவது தாக்குதல் இதுவாகும்

இச்சேதமயம் ஆப்கான் மீது பதில் தாக்குதலை பாகிஸ்தான் மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக பாக் பிரதமர் முகமட்கான் யூனிஜ்ஜோ அறிவித்துள்ளார்.

பாக் பிரதேசத்தினுள் ஊடுருவும் விமானங்களை கட்டுவீழ்த்துமாறு விமானப்படைக்கு பணிக்கப்பட்டுள்ள தெனவும் அவர் தெரிவித்தார். (ஒ)

லண்டனில் மது பரிமாற விதித்த தடை நீக்கம்

லண்டன், மார்ச்.1

பிரிட்டனில் உள்ள உணவு விடுதிகளில் மாலை நேரங்களில் மது பரிமாறுவதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படுகிறது

இத்தடை நீக்கம் ஏப்ரல் முதல் நடை முறைப்படுத்தப்படும்.

இப்போது உணவு விடுதிகளில் பிற்பகல் 3 மணியில் இருந்து மாலை 5.30 மணி வரை உணவுடன் மது பரிமாறுவது தடை செய்யப்பட்டுள்ளது

1915 இல் இத்தடைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இத்தடையை நீக்க வேண்டும் என்று பிரபுக்கள் சபையில் உறுப்பினர் ஒருவர் தனி நபர் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார்.

அந்தப் பிரேரணை நேற்று பிரபுக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டது

இத்தடை நீக்கம் பிரிட்டிஷ்காரின் நாளாந்த வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் என்று பி.பி.சி தெரிவித்தது. (ஒ-எ)

கம்யூ. தலைவர் காரணமாம்

பீகிங், மார்ச் 1

சீனாவில் கடந்த வருடப் பிற்பகுதியில் நடைபெற்ற மாணவர் ஆர்ப்பாட்டங்களுக்கு முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் கூ-யாகோ-வாங்கே அத்திபாரமிட்டார் என தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 16 ஆம் திகதி கூ-வாங் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார். (ஒ)

தமிழக பட்ஜட்

சென்னை, மார்ச்.1

தமிழ்நாடு அரசின் 1987 – 88 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை மார்ச் மாதம் 20 ஆம் திகதி நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் சமர்ப்பிப்பார். (ஒ)

ஐரோப்பாவிலிருந்து

ஏவுகணைகளை அகற்ற ரஷ்யா தயார்!

கோர்பச்சேவ் பிரேரணை

மாஸ்கோ, மார்ச்.1

ஐரோப்பாவிலிருந்து நடுத்தர வீச்சு ஏவுகணைகளை நீக்கி விடுவதற்கான உடனடி ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்காவுடன் மேற்கொள்வதற்கு ரஷ்யா தயாராக உள்ளது.

இவ்வாறு ரஷ்ய அதிபர் மிக்கையில் கோர்பச்சேவ் அறிவித்தார்

ஆனால் ஏவுகணை கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தில் வேறு பட்டதாக இந்த ஒப்பந்தம் இருக்க வேண்டும்.

நடுத்தர வீச்சு ஏவுகணைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான பேச்சு வார்த்தைகள் ஏற்கனவே இருதரப்பிலும் திட்டமாக இருந்து வந்துள்ளது. இதனை முற்றாக பூர்த்தி செய்வதற்கு ஆகக் குறைந்தது ஐந்து வருடகாலம் தேவைப்படும். அதன் மூலம் ஐரோப்பாவிலுள்ள நூறு நடுத்தர வீச்சு ஏவுகணைத் தளங்களை ரஷ்யா அகற்றும் அவ்வாறே அமெரிக்காவும் நிலைநிறுத்தியுள்ள நூற்றுக்குமதிகமான தளங்களை அப்புறப்படுத்தும்.

இந்த ரஷ்யாவின் பிரேரணையை அமெரிக்கா ஆதரித்தால் தொலைதூர வீச்சு ஏவுகணைகளையும் செக்கோஸ்லோவாக்கியாவிலிருந்தும் கிழக்கு ஜேர்மனியிலிருந்தும் காலக்கிரமத்தில் அகற்ற நடவடிக்கை ரஷ்யாவால் மேற்கொள்ளப்படும்.

கோர்பச்சேவ்வின் இந்த ஆலோசனையை தாம் வரவேற்பதாக அமெரிக்கா அறிவித்தது எனினும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவது பற்றி எதனையும் தெரிவிக்கவில்லை. (ஒ)

நைஜீரியா கடத்தியது

லாகோஸ், மார்ச் 1

நைஜீரியாவிலிருந்து கடந்த ஒரு மாதகாலப் பகுதியில் 836 சட்டவிரோத குடியேற்றவாசிகள் நாடுகடத்தப்பட்டனர்.

இவர்களில் அனேகர் லிபியாவிலிருந்து சட்டவிரோதமாக நைஜீரியாவினுள் நுழைந்திருந்தனர். (ஒ)

வங்காளியே உத்தியோக மொழி

டாக்கா, மார்ச் 1

பங்களாதேஷில் ஆங்கிலத்திற்குப் பதிலாக வங்காளியை உத்தியோக மொழியாக்கும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. எதிர்காலத்தில் வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்வதற்கு மட்டுமே ஆங்கிலம் பயன்படுத்தப்படும். (ஒ)

மாணவர் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, மார்ச் 1

புதுடில்லியில் வெளிநாட்டு மாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியபோது சுமார் 100 பேர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவில் கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்கள் கட்டாயமாக எய்ட்ஸ் பரிசோதனைக்குள்ளாக வேண்டும் என அரசு விடுத்துள்ள உத்தரவை ஆட்சேபித்து இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. (ஒ)

பிரிட்டனில் நாஜி குற்றவாளிகள்

மாஸ்கோ, மார்ச் 1

அற்பொழுது பிரிட்டனில் வசிக்கும் முன்னாள் நாஜி குற்றவாளிகள் 34 பேரின் பெயர்களை ரஷ்யா இன்று வெளியிட்டது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது இவர்கள் போலாந்தில் பிரிட்டிஷ் இராணுவத்தினரை கொன்று குவித்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

உலக ஜனத்தொகை 500 கோடி

வாஷிங்டன், மார்ச் 1

உலகின் ஜனத்தொகை இவ்வருடம் ஜூலை மாதமளவில் 500 கோடியாக அதிகரிக்கும் என ஐ.நா. சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

12ஆம் நூற்றாண்டளவில் உலக ஜனத்தொகை 1000 கோடியாக அதிகரிக்கும். (ஒ)

வெளி உலகில்

அந்நிய மாணவர் மீது 'எய்ட்ஸ்' பரிசோதனை

புறுசெல்ஸ், மார்ச் 1

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலிருந்து சென்றுள்ள மாணவர்கள் 'எய்ட்ஸ்' நோய் பரிசோதனைகளுக்குள்ளாகவேண்டும். அல்லது அவர்களது புலமைப் பரிசில்கள் ரத்துச்செய்யப்படும்.

இவ்வாறு பெல்ஜியம் அரசு அறிவித்துள்ளது.

பெல்ஜியத்தில் 1,500 புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள் இருக்கின்றார்கள். இவர்களில் அனேகர் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் சுவிற்ஸர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக எய்ட்ஸ் நோயை மிகக் கொண்டிருக்கும் மூன்றாவது நாடாக பெல்ஜியம் இருக்கின்றது. (ஒ)

இஸ்ரவேல் வலையில் இலங்கைத் தீவகற்பம்

திரு. அருண் சாக்கோ பிரபல இந்தியப் பத்திரிகையாளர்.

'வோர்ல்ட் பேப்பர்' என்ற ஆங்கில சஞ்சிகையில் தெற்காசிய இணை ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

இஸ்ரவேலியர் தந்திரம் பற்றி அவர் எழுதிய கட்டுரை ஒன்று 'வோர்ல்ட் பேப்பரில்' வெளியானது.

இஸ்ரவேலியர்கள் தங்கள் நலன்களை முன்னெடுத்துச் செல்ல எதுவும் செய்வார்கள்.

ஏறக்குறைய அமெரிக்கர்கள் எதற்கும் இடங்கொடுப்பார்கள் அவர்களையும் இஸ்ரவேலியர்கள் இழுத்துச் செல்லும் இஸ்ரவேலியர்களுக்கு அது உதவியாக இருக்கும்.

அப்படி முடியாவிட்டால் இஸ்ரவேலியர்கள் அமெரிக்கர்களைப் பற்றிக் கவலைக்காமல் தங்கள் நடவடிக்கைகளை முன் எடுத்துச் செல்வார்கள்.

அமெரிக்காவின் நலன் பாதுகாக்கப் படுகிறதோ இல்லையோ, அமெரிக்க ராஜதந்திர அமைச்சின் ஆதரவு தங்களுக்கே என்ற நம்பிக்கையுடன் இஸ்ரவேலியர்கள் செயல்படுவர்.

மத்திய கிழக்கில் புத்திசாலித் தனமாகவும் காட்டுமிராண்டித் தனமாகவும் இஸ்ரவேலியர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

இப்போது தம்மை விரும்பி அழைத்த இலங்கையிலும் இஸ்ரவேலியர்கள் செயல்படத் தொடங்கியுள்ளனர்.

இஸ்ரவேலுடன் இலங்கை ராஜதந்திர தொடர்பு வைத்திருக்கவில்லை. இந்த நிலையில் கொழும்புக்கு இஸ்ரவேலிய ஜனாதிபதி செயிம் ஹெர்ஸோக் விஜயம் செய்தது அனைவரையும் வியப்பிலாழ்த்தியது.

தமிழருக்கு எதிரான இலங்கை அரசின் குரூரமான யுத்தத்தில் இஸ்ரவேல் நீண்டகாலமாக ஈடுபாடு கொண்டிருக்கின்றது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு வெளியே இஸ்ரவேல் நலன் காக்கும் பிரிவு இயங்குகிறது.

178 இஸ்ரவேல் ஏஜண்டுகள் இலங்கையில் உள்ளனர். என்று இலங்கை நாடாளுமன்றத்தில் அண்மையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரலில் இருந்து விஸா இன்றி இஸ்ரவேலியர்கள் இலங்கை செல்ல அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் இன்று குழப்பத்தை ஏற்படுத்தி வருவது இலங்கை அரசின் விசேட அதிரடிப் படை.

இஸ்ரவேல் உள்ளூர் புலனாய்வுப் பிரிவான ஷின்பெற், இந்த அதிரடிப் படைக்கு பயிற்சி அளித்து வருகிறது.

ஷின்-பெற் பிரிவின் அதிகாரிகள் பலர் இலங்கையில் காணப்பட்டனர்.

அரபு மேற்குக் கரைப் பிரதேசத்தில் கடைப் பிடிக்கப்பட்ட இராணுவ உத்திகளே இன்று அங்காறை மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

முகாம்களை நெருக்கமாக அமைப்பது, ஆண்களைக் கைது செய்வது, பெண்களைத் துன்புறுத்துவது, கட்டுக் கொல்லப்பட்டவர்களை டயர்களை போட்டு எரிப்பது, தமிழருக்கு எதிராக முஸ்லிம்களை நிருப்பி விடுவது, சிங்களக் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பிப்பது, சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு ஆயுதங்கள் வழங்குவது மேற்கூறப்பட்ட செயல்கள் அனைத்தும் அரபு மேற்குக் கரைப் பிரதேசத்தில் இஸ்ரவேலியர் கடைப்பிடித்த உத்திகளின்மறுவடிவங்களே.

தமிழ்ப் போராளிகள் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டவுடன் சித்திரவதைப்படுத்தப் படுகின்றனர் பின்னர் முகமூடி அணியவைக்கப்பட்டுள்ள கைதிகள் முன் நிலையில் நிறுத்தி வைக்கப் படுகின்றனர். முகமூடி அணிந்த ஒரு துரோகி தன்னையாட்டி விட்டால் போதும் அழிவு வந்து விடுகிறது.

அரபு மேற்குக் கரைப் பிரதேச உத்தியின்சாயல் மீண்டும் தெரிகிறது.

இராணுவ ஆலோசனை வழங்குவதில் மட்டும் அல்ல; வேறு துறைகளிலும் ஈடுபடுவதில் இஸ்ரவேலியர்கள் நாட்டம் காட்டி வருகின்றனர்.

அதன் மூலம் இலங்கையில் எப்பொழுதும் தங்கி இயங்கக் கூடிய வாய்ப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் இஸ்ரவேலியர்கள் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

சந்தை

கண்டுக்குளியில் கிறிஸ்மஸ் அபிவிருத்தி நிலைக்களத்தில் தேசிய சந்தை எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் கண்டி வீதி, சுண்டிக்குளியில் இயங்க உள்ளது

இதுவரை யாழ் நகர் படமாளிகைக்கு அருகில் இந்த தேசிய சந்தை இயங்கி வந்தது. (உ-எ)

சமய நிகழ்ச்சிகளில்

திருப்பணி வேலை ஆரம்பம்

ஊர்காவற்றுறை, மார்ச் 1

கரம்பன் ஸ்ரீ பத்திரகாளி கோயில் பரிபாலன சபையினர் பல திருப்பணி வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

உள் கொட்டகை திருத்தியமைக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. அத்துடன் ஆலயத்தின் நிர்வாக அலுவலகக் கவிக்க ஓர் அலுவலகம் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

அதில் முழுநேர தொண்டர் ஒருவர் கடமையாற்றி வருகின்றார். (உ-16)

வருடாந்த உற்சவம்

புங்குடுதீவு, மார்ச் 1

புங்குடுதீவு கிழக்கு நல்லூரப்பற்று அருள்மிகு சங்கரமூர்த்தி-முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்களுக்குச் சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

இம்மாதம் 12 ஆம் திகதி (12-03-87) காலை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்படி தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர் செய்துள்ளனர். (உ-131)

எல்லைக் கிராமங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 1

வடக்கு—கிழக்கு மாகாண எல்லையிலுள்ள சிங்களக் கிராமங்களுக்கு 24 மணி நேரமும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

வெலிக்கந்த, மதுவாச்சி, அம்பாறை, வல்லி யெல்ல ஆகிய பகுதிகளுள்ள சிங்களக் கிராமங்கள் இதில் அடங்குகின்றன.

இக்கிராமங்கள் மீது ஏதேனும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுமாயின் அதை முறியடிக்க படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், படைவீரர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-21)

அன்பு, சேவை, சத்தியம் ஆகியவற்றால் உயர்வு

சுவாமி சித்ருபானந்தா விளக்கம்

பருத்தித்துறை, மார்ச் 2

'அன்பு, சேவை, சத்தியம் இவை மூன்றும் மாணவர்களின் வளர்ச்சிக்கு முக்கியமானது' என பருத்தித்துறை மெதடிஸ்ற பெண்கள் உயர்தரக் கல்லூரியில் நடைபெற்ற இந்துமன்றக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ருபானந்தா குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி அதிபர் திருமதி வீணாவதி சந்திரசேகரம் தலைமை வகித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

எந்தச் சந்தர்ப்பத்திலும் உண்மையைப் பேசுபவர்கள்தான் உயர்வடைவார்கள்.

பாண்டிநாட்டில் மீண்டும் சைவத்தைத் தழைக்கச்செய்தமையினால் பெரும் பங்கு மங்கையர்க்கரசியாருக்கே உண்டு. இன்றைய உலகில் அன்னை சாரதாதேவி பெண்களுக்குத் தெய்வமாகத் திகழுகிறார்.

இக்கல்லூரியிலுள்ள பெண்களாகிய நீங்கள் நமக்கு முன்னோடியாக வாழ்ந்த சிறந்த பெண்மணிகளின் வாழ்க்கையைப் பின்பற்றவேண்டும்.

பேச்சையிடச் செயல் தான்சிறந்தது. நல்லதை எண்ணி அதனையேபேசி செயலில் காட்டுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் உத்தமராவீர்கள்.— இவ்வாறு அவர் கூறினார். (உ-118)

மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

வண்ணார்பண்ணை தட்டாதெரு அருள்மிகு சுவாலாஜோதி சிவயோக முனீஸ்வரர் ஆலய சந்தானகோபாலர் சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

வித்துவான் கணபதிப்பிள்ளை சிறப்புரை நிகழ்த்துவார். (உ-எ)

பொன்யாமொழி

குறள்:

யாதானும் நாடமா லூராமா லென்றொருவன்
சாதலினாயுங் கலாத வாறு.

பொருள்:

கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும் போலவே வேறு எதுவாயினும் நாடாகும்; ஊராகும்; ஆகையால் ஒருவன் சாகாவரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த வீடியோ
படப்பிடிப்புக்கு
ஸ்ரூடியோ
நித்ய சித்ரா
பிரதான வீதி, — சங்கானை.

உதயன்

02 - 03 - 1987 திங்கட்கிழமை

வீடியோ படப்பிடிப்பு
கறுப்பு / வெள்ளை-கலர்- உட்புற வெளிப்புற
படப்பிடிப்பு, பிறேம் செய்தல்
பிலிம்ரோல் — அல்பம் விற்பனை
ஸ்ரூடியோ
★ நித்ய சித்ரா ★
சங்கானை.

சித்தாரம்

என்ன முரளிவார், உம்மைக் கண்டு கனநாளாய்ப் போச்சது என்ன எல்லையும் வெளியூர் போய் வந்தனீரோ?

என்ன, வடக்கை ஒருவரும் பார்க்கிறது என்டு தான் அரசாங்கமும் இராணுவமாரும் நிக்கினம் பாக்கயில்லையே.

வலிகாமம் வடக்குப் பக்கத்திலை தொடங்கி இருக்கினம். அட்டியே முன்னேறிக் கொண்டு யாழ்ப்பாணம் வாற நோக்கமோ அல்லது அங்கை போராளியள் வளைத்தைத் திருப்பிப் போட்டு கோட்டையிலிருந்து வெளிக்கிடுகிற திட்டமோ தெரியயில்லை.

மார்ச் மாதம் முதற் கிழமை அது தப்பினால் இரண்டாவது கிழமை தானே அவை யாழ்ப்பாணத்தைக் 'கைப்பற்ற' நிர்ணயித்தகாலம் என்டு சொல்லக் கேள்வி. இண்டைக்கு இரண்டாம் திகதி.

சனிக்கிழமையண்டு கிளிநொச்சி, பரந்தன் முகாம்களாலை வந்த வைக்கு இராமண்ணமார் "குறி" சொன்னவையாம்.

இன்னும்இரண்டு நாட்களிலை யாழ்ப்பாண நகரத்தின் மீது தாக்குதல் நடத்தப்படும் என்டமாதிரி அவை சொல்லி விட்டினமாமே!

"நாங்கள் திடீர் தாக்குதல் நடத்தினால் நீங்களும் பாதிக்கப்படலாம். ஆனதாலை போக்குவரத்தைக் குறைக்கிறது நல்லது" என்டு பயணிகளுக்கு புத்திமதியும் புகட்டினவையாம்.

உவை சொல்லுறதை நம்புறதோ விடுகிறதோ என்டு நீ கேட்டால் நிலைமை கிறுய். இல்லையே!

நம்பவும் முடியாது; நம்பாமல் இருக்கவும் முடியாது என்ட நிலை.

கதையுக்குள்ளை கதையாய் ஒரு முசுப்பாத்தி. ரோஹண விஜயவீராவையும், அவரது கட்சியின் நடவடிக்கைகளையும் கண்டுபிடிக்க என்டு பொலிசில் ஒரு தனிப் பிரிவு ஆரம்பிச்சிருக்கினம்! இராசியமாக இருந்துகொண்டுசெய்பிற இயக்கங்களை கண்டு பிடிக்கிறது தான் அந்தப் புதிய பிரிவின்வேலை.

அதோடை தென்னிலங்கையில் மறைமுகமாக இயங்கும் இயக்கங்களுக்கும் தமிழ்ப் போராளியளுக்கும் தொடர்பு உண்டோ என்டு அறியிறதும் அந்தப் பிரிவுக்குரிய வேலையாம்.

உந்தக் கதையளைப் பாக்க தென்னிலங்கையிலும் பூம்பூம் வெடிகளும் போலை தெரியுது. மன்னாரும் மெல்ல மெல்ல யாழ்ப்பாணமாய் மாறிற அறிகுறியள் இருக்கு என்டு அங்கை யிருந்து வந்த ஒருவர் காதிலை போட்டார்.

தொண்டமான் தமிழ் நாடுபோறார். மன்னாரு பற்றி ஏதாவது ஆலோசனை நடந்த வாய்ப்பு இருக்குமோ என்டு மன்னாட்டான் வந்தவர் ஜமிச்சப்பட்டார்.

அதைச் சொல்லத் தான் ஞாபகம் வருகுது. ராஜீவுக்கும் எம். ஜி. ஆருக்கும் இப்ப நல்லாய் தெரிச்சுப் போச்சாம். எல்லாம் அரசியல் தான். வீரப்பன் கோஷ்டியை வீழ்த்தி திறதெண்டா, தான் உயிரோடு இருக்கவைக்கையே எல்ஷேவவச்சால் நல்லது என்டது எம். ஜி ஆரின் விருப்பம். அப்படிச் செய்யிறதை விட இந்திரா காந்திரஸும் அ தி மு. கவும் சேர்ந்து கூட்டரசு அமைச்சால் என்ன என்டது ராஜீவின் வாதம். அதுக்கு இணங்க எம். ஜி ஆருக்கு மனமில்லை. கூட்டரசாங்கம் அமைச்சால், வீரப்பன் கோஷ்டிப் பிளவைச் சாதகமாக்கி, எம். ஜி ஆர் மண்டையைப் போடுக்கை சிதம்பரத்தை முதலமைச்சராக்கலாம் என்டது ராஜீவின் திட்டம். இலங்கைப் பிரச்சினையில் சிதம்பரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்ததின் உள்நோக்கமே அதுதானாம்.

பதவி ஆசை ஆரைத் தான் விட்டது. கூட்டரசாங்கம் அமைக்க எம் ஜி. ஆர். இடம்கொடுக்மாட்டாராம். கறையான் புத்துக்கை வாம்பு புகுந்த மாதிரிப் போய்விடும் என்டு நினைக்கிறாராம் எந்தப் புத்துக்கை எந்தப் பாம்பு என்டு இந்தக் காலத்திலை சொல்ல ஏலுமே?

ஏகலைவன்

இலங்கையின் ஆட்சி இந்திய அரசிடமா?

சிறிமா கேள்வி

கொழும்பு, மார்ச் 2

இலங்கையை இன்று யார் ஆட்சி புரிகிறார்கள்? ஜனாதிபதி ஜெயவர்த்தனா தலைமையிலான அரசாங்கம் நாட்டை நிர்வகிக்கின்றதா? அல்லது இந்திய அரசுதான் நிர்வகிக்கின்றதா?

இந்தியாவின் ஒத்துழைப்பு எமக்கு அத்தியாவசியம். அதற்காக இந்தியாவின் விருப்பத்துக்கு இணங்க நாம் ஆட்சியை நடத்த முடியாது.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா முன்னாள் வாரு மாத்தறையில் நடத்த கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருமதி பண்டாரநாயக்கா சொன்னதாவது:-

மக்களைப் பாதுகாக்க முடியாத நிலையில் இந்த அரசு உள்ளது.

இன்று பதவியில் இருப்பதற்கு யு என் பி. கட்சிக்கு உரிமை இல்லை.

கடன்

உலக வங்கி, மற்றும் பல சர்வதேச அமைப்புக்கள் கோடிக்கணக்கான பணத்தை கடனாக வழங்கியுள்ளன. நாம் பதவிக்கு வந்தால் இக்கடன்களைத் திருப்பிச் செலுத்த மாட்டோம்.

இந்த நாட்டைப் பிரிக்க ஒருவருக்கும் உரிமையில்லை.

1971 இல் இராணுவ செலவு 15 ஆயிரம் ஆக இருந்தது. பொலீஸார் 6 ஆயிரம் பேர் சேவையில் இருந்தனர்.

இன்று இராணுவத்தில் 50 ஆயிரம் பேர் உள்ளனர். பொலீஸில் 25 ஆயிரம் பேர் உள்ளனர். இருந்தும் அரசினால் தீவிரவாதப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு தினமும் பாதுகாப்பு வழங்க 90 லட்சம் ரூபா செலவு செய்யப்படுகிறது.

தாய்மார் குழந்தைகளை விற்கத் தொடங்கி புள்ளனர். ஒரு குழந்தையின் விலை ஐந்நூறு ரூபா. வியாபாரப் பொருளாகி விட்டது குழந்தை.

தாராளப் பொருளாதாரக் கொள்கையின் மேல் குழந்தைகளையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்

-இப்படி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தெரிவித்தார். (உ-எ)

நியாய விலை..

(1ஆம் பக்க தொடர்ச்சி)

ளது

நேற்று ஹோட்டல் ஞானம்மில் யாழ் வர்த்தகர் சங்கத்தின் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது அதுக்கு வைத்தியே வர்த்தகர்களுக்கு மேற்கண்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

எரிபொருள் தடைகாரணமாகவும், அரசு அலுவலங்கள் செயலற்றிருப்பதன் காரணமாகவும் யாழ் வர்த்தகர்கள் பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளனர்

இருந்தும் சகல வர்த்தகர்களும் சகல மக்களுக்கும் நியாய விலையில் பொருள்களை விற்பனை செய்ய முன்வர வேண்டும்.

அத்தியாவசியப் பொருள்களைத் தடங்கலின்றி விற்பனை செய்ய வேண்டும்- என்று கோரிக்கை விடுக்கப்பட்டது (உ-10)

வவுனியா---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டனர்.

கைதானோரை விடுவிப்பதற்காக வவுனியா மாவட்ட பிரசைகள் குழுத் தலைவர் டாக்டர் பரராஜசிங்கம் வவுனியா முகாம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

கட்டுவனில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கிப் பிரயோகங்களும் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை பல வி, வயாவிளான் முகாம்களில் இருந்தும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (உ-10)

ராஜீவின் புதிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா எதிர்க்கட்சித் தலைவர்களுடனும் இரகசியப் பேச்சுக்கள் நடத்தி இருக்கின்றார்.

ஒரே முறையில் சந்திப்பு

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்கள், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர்கள் ஆகியோரை அழைத்து புதிய நெருக்கடி பற்றி ஜெயவர்த்தனா பேச்சுக்கள் நடத்தினார்.

இத்தலைவர்களைத் தனித் தனியாக வந்து சந்திக்கும்படி ஜனாதிபதி கேட்டிருந்தார். ஆனால் முக்கட்சித் தலைவர்களும் ஒரேமயத்தில் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

பின்னர் வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டார நாயக்காவை அழைத்து ஜனாதிபதி பேச்சுக்கள் நடத்தினார்.

சிறிமாவையும் சந்திக்க விருப்பம்

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவையே சந்தித்துப் பேசும் தனது விருப்பத்தை திரு ஜெயவர்த்தனா திரு. அனுரா பண்டாரநாயக்காவிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்களை வெளியிட இந்த அரசியல் கட்சித் தலைவர்கள் மறுத்துவிட்டனர்.

வெளியிட உரிமையில்லை

ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவி திருமதி சந்திரிகா குமாரணதுங்கா இது தொடர்பாகக் கூறியதாவது:-

என்ன பேசப்பட்டது என்பதை பத்திரிகைகளுக்கு வெளியிட எமக்கு உரிமையில்லை.

டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா சொன்னதாவது:-

இரண்டு மணித்தியாலங்கள் வரை ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்தினோம். நாம் என்ன பேசினோம் என்பதை பத்திரிகைகளுக்கு வெளியிட இது தருணம் அல்ல- என்றார். (அ-ர)

பொருளா . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பொருளாதார முற்றுகை அகற்றப்பட வேண்டும்.

அமைதித் தீர்வு ஒன்றுகாணும் முயற்சியில் இந்தியா தனது மத்தியஸ்தத்தைத் தொடர வேண்டும்.

-இப்படி அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

அறிக்கையில் கையொப்பமிட்டுள்ள தமிழறிஞர்கள் வருமாறு:

முன்னாள் நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் இலங்கைக்கானமுன்னாள் இந்தியத்தூதர் தோமஸ் ஏப்ரஹாம். இந்திரன் எக்ஸ்பிரஸ் செய்தி ஆசிரியர் ராஜ்மோகன் காந்தி, முன்னாள் துணை வேந்தர் கே. ஆர் சீனிவாசஐயங்கார். பேராசிரியர் கே கணபதிநாதன். (உ-எ)

அடகு நகை..

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

தொடர்பு கொண்டு அடகு நகைகளை ஒப்படைக்க உதவுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் அரச அதிபர் கேட்டுக்கொள்ளார்.

ஆகவே இந்த விடயம் குறித்து நிதி அமைச்சர் திரு. ரெனி டி மெல்லுடன் தொடர்புகொண்டு ஆவன செய்யுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகத்திடம் அரச அதிபர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஓர் ஆக்கபூர்வமான முடிவை எடுப்பதற்கு என அரச அதிபரின் பிரதிநிதியான பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. குலசேகரம் கொழும்பில் தங்கியுள்ளார்.

மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளரும் கொழும்புக்கு அழைக்கப்படலாம் என நம்பகரமாகத் தெரிய வருகிறது. (உ-10)

தூர---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

குறிப்பிடத் தக்கது

திருகோணமலை, அனுராதபுரம் பகுதிகளுக்கான சேவைகள் தொடர்ந்து நடைபெற்றதாயினும் இடையில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக இச்சேவையானும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

காலை ஆறுமணிக்கு முன்று பஸ்களும் யாழ் பஸ் நிலையத்தில் அதிக பயணிகளுடன் தமது சேவையை ஆரம்பித்தன.

இன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ் சேவை நடைபெறும். (உ-10)

யாழ்ப்பாணம் நல்லூர்க்கழகம்

புத்தகங்களும் பருவ இதழ்களும் கட்டுதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் புத்தகங்களும் பருவ இதழ்களும் கட்டுவதற்கு அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன

புத்தகத்தின் மொத்தம் 1/4 அங்குலத்திலிருந்து 3½ அங்குலம் வரை வித்தியாசப்படுகிறது. புத்தகத்தின் நீள அகலம் 7'' X 5'' தொடக்கம் 11'' X 9'' அங்குலம் வரை வித்தியாசப்படும்.

1. கட்ட வேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கை சுமார் 1000
2. புத்தகத்தின் தலைப்பிலும் முதுகுப் புறத்திலும் எழுத்துக்கள் பொன் முலாம் மூலம் பொறிக்கப்பட வேண்டும்.
3. புத்தக உறை இரண்டு இருக்கக் தடித்த மட்டையில் அமைதல் வேண்டும்.
4. தேவைப்படும் மேலதிக விபரங்களுக்கு உதவிப்பதிவாளர் நூலகத்துடன் அலுவலக நேரங்களில் தொடர்புகொள்ளவும்.

மேற்படி பொறியிடப்பட்ட கூறுவிலைகள் எதிர்வரும் 09-03-1987 திகு முன்னர் நிதியாளருக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவேண்டும்.

கூறுவிலைகள் திறக்கப்படும் நேரம் 09-03-1987 காலை 10-00 மணியாகும்.

விண்ணப்ப கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்.

"Tender for Book Binding" என்று எழுதப்படவேண்டும் பதிவாளர்

யாழ்ப்பாணக் - கொக்குவில்

இந்து அணிகள் மோதல்; வெற்றி தோல்வி இல்லை

— விளையாட்டுச் செய்தியாளர், சண். ஜோன்சன் —

யாழ்ப்பாணம், மார்ச்2

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையே நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டி நேற்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

சனி, ஞாயிறு ஆகிய இருதினங்கள் நடைபெற்ற இப்போட்டியில் மோகன், கே. வில்வநாதன் ஆகியோர் முறையே 50, 29, 28, 28 47 ஓட்டங்களைப் பெற்றனர்.

கே எஸ் ரவிக்குமார் 19 3 ஓவர்கள் பந்துவீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் ரி. கே. புவனேந்திரன், எஸ். பி பிரபானந்தன் ஆகியோர் முறையே 3, 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸ்ஸில்தாக துடுப்பெடுத்தாடிய யாழ் இந்து அணி 205 நிமிடங்களில்8 விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது

பி பத்மபிரசாஷ் 18 பவுண்டரிகள் அடங்கிய 73 ஓட்டங்களையும், கே எஸ் ரவிக்குமார் 3.விக்சர்கள் 6 பவுண்டரிகள் அடங்கிய 60 ஓட்டங்களையும், எஸ் நிவேதன்48 ஓட்டங்களையும் எஸ் பி. பிரபானந்தன் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

எஸ். கிருபானந்தன் 16. 8 ஓவர்களில் 93 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில்தாக துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து ஆட்டநேர முடிவுபோது 7 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ் கிருபானந்தன் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும், ஜே. பேரின்பநாதன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

கே. எஸ் ரவிக்குமார், எஸ் பி. பிரபானந்தன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (உ-7)

பாடசாலைகளின் கிரிக்கெட் மோதல்கள்

கொக்குவில் இந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது

நின்று நிதானமாக ஆடிய இந்த அணி 245 நிமிடங்கள் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ். கிருபானந்தன், ஜே. பேரின்பநாதன், ரி. திருத்தணிகன் ரி விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொண்டா பயணம்

கொழும்பு மார்ச்2

அமைச்சர் எஸ். தொண்டமான் நேற்று தமிழ் நாடு சென்றார்.

அதற்கு முன்னர் ஜனாதிபதி ஜெயவர்த்தனவை அவர் சந்தித்து உரையாடினார்.

எரிபொருள் மற்றும் தடைகளை நீக்கி தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்களை நடத்த வேண்டிய அவசியம் பற்றி அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதிக்கு வலியுறுத்தினார் என்று தெரிய வருகிறது.

தி. மு. க - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வைத்து ஆளுநர் எஸ் எஸ். குரானா நிகழ்த்திய உரை, சட்டசபைத் தேர்தல் வரப்போகிறது என்பதை உணர்த்தி இருப்பதாக சென்னை அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆளுநர் உரையில், கிராமப்புறங்களில் வேலை செய்யும் ஏழைப் பெண்கள், மாணவர்களுக்கு இலவசக் காலணி, கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் இலவச சத்துணவுத் திட்டம் ஆகியவற்றை அமுல் நடத்த 400 கோடி ரூபா (இந்தியப் பணத்தில்) ஒதுக்கப்படும் என்று அறிவித்திருப்பது, தேர்தல் வரப்போகிறது என்பதை முன் கூட்டியே உணர்த்தி உள்ளது. என்று சென்னை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

திறப்பு விழா

JEMES MEMORIAL MEDICAL CLINIC
ஜேம்ஸ் ஞாபகார்த்த சிகிச்சை நிலையம்
சகலவிதமான நோய்களுக்கும் ஏற்ற வகையில் சிகிச்சை அளிப்பதற்காக
டாக்டர் ஏ. ஜேம்ஸ் பிரான்சிஸ் பிரகாசம்
(D A M., R I. M. P., Cey.)
அவர்களால் நடத்தப்படவுள்ள வைத்திய நிலையத்தை
02 - 03 - 1987 திங்கட்கிழமை
நண்பகல் 12 மணிக்கு
வைத்திய கலாநிதி சு. ஸ்ரீவிக்னேஸ்வரா
(யாழ்நகர் பிறப்பு இறப்பு வைத்திலப் பதிவாளர்)
அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.
ஜேம்ஸ் ஞாபகார்த்த சிகிச்சை நிலையம்
7, சுவாமிஸ் லேன், கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

பிறந்தநாள் வாழ்த்து

செல்வி மயூரிகா செல்வராசா

நந்நாளில், கொக்குவிலைச் சேர்ந்த செல்வராசா (நாதன்) கவேந்திராதேவி (றஞ்சி) ஆகியோரின் அன்பு மகள் மயூரிகா இன்று தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார். இவரை, அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மற்றும் உற்றார், உறவினர்கள் நந்நாளில் கற்புலத்து மணேஷ்மணி அம்மன், மாத்தளைக் கந்தன் அருளால் நிறைந்த செல்வங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
1987
யாழ் ஜோ விஸ்ரூஸ் லியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி
வீரரின் பெயர் .....
கல்லூரி .....
வாக்களர் பெயர் .....
விலாசம் .....
ஒப்பம் .....

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் அச்சகத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 02 - 03 - 1987 தொலைபேசி இல. 24805 22075

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Under Number QJ / 94 /N /87.
Telephone. 24805, 22075

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org